# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகம், விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்

**காணாமல் போன குழந்தைகளை மீட்டெடுப்பது தொடர்பாக காவல் நிலையங்களில் பணியாற்ற சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு**

(Selection of Para Legal Volunteers in Police Stations for missing children and other offences against children)

தேதி:15.05.2026

******

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Bachpan Bachao Andolan VS Union of India and Others, என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படியும், தமிழ்நாடு அரசின் G.O.(Ms)No.130, Dated: 12.03.2026 உத்தரவு படியும் மற்றும் தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் ஆணைப்படியின் வழிகாட்டுதலின் படியும், விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கும் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் இயங்கி வரும் விருதுநகர், அருப்புக்கோட்டை, சாத்தூர், சிவகாசி, இராஜபாளையம், வத்ராப், காரியாபட்டி மற்றும் திருச்சுழி ஆகிய தாலுகாவில் இயங்கிவரும் வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கும், குழந்தை தொழிலாளர் முறை மற்றும் கடத்தலுக்கு எதிரான குற்றங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் காணாமல்போன குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறு வாழ்வு அளித்து கல்வி கற்பிப்பதன் மூலம் குழந்தை நட்பு சமுதாயத்தை உருவாக்க (30-40) “சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers-P.L.V)” தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். இப்பணி சட்ட தன்னார்வர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமே. இது நிரந்தர பணிக்கானது அல்ல, முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கு கீழ்கண்ட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கல்வித் தகுதி மற்றும் வயதுவரம்பு :-**

**P.L.V-ஆகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு (Plus Two) ஆகும். வயது வரம்பு 25 முதல் 65 வயது வரை இருக்க வேண்டும். பட்டதாரிகளுக்கும், சமூகப் பணி, உளவியல் அல்லது அது சார்ந்த பிற துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.**

அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்குப் பட்டியலிடப்படுவார்கள்; அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில், மாவட்ட

சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவரின் பரிந்துரையின் பேரில் இக்காலம் மேலும் நீட்டிக்கப்படலாம்.

சட்டத் தன்னார்வலர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக, பின்வருவன அவர்களின் கடமைகளாகவும் பொறுப்புகளாகவும் அமையும்:

- விசாரணையின் போது உதவுதல்
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்
- காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மீட்கப்பட்ட குழந்தைக்குப் பிந்தைய கால ஆதரவு அளித்தல்
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல்.

**பணி:** காணாமல் போன குழந்தை தொடர்பான வழக்கு அல்லது குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்கு ஏதேனும் பதிவாகும் போதெல்லாம், காவல் நிலைய ஆய்வாளர் (SHO) அல்லது காவல் நிலைய எழுத்தர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு/வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு தகவல் தெரிவித்து, ஒரு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டரை (PLV) காவல் நிலையத்திற்கு அனுப்பி, புகார்தாரருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கோ உதவ ஏற்பாடு செய்ய வேண்டும்.

காணாமல் போன குழந்தைகள் தொடர்பான வழக்குகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பிற குற்றங்கள் தொடர்பான விவரங்களை, காவல் நிலைய ஆய்வாளர் (SHO), சூழலுக்கு ஏற்ப DLSA-க்கோ அல்லது TLSC-க்கோ உடனடியாக வழங்க வேண்டும்.

சட்டத் தன்னார்வலர்கள் (PLVs) வருகைப் பதிவேடு, காவல் நிலையங்கள் மற்றும் மாவட்ட / வட்ட சட்டப் பணிகள் ஆணையங்களில் (DLSA/TLSC) முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

சட்டத் தன்னார்வலர்கள், மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் செயலாளரிடம் மாதந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கைகள், தன்னார்வலர்களின் செயல்பாடு மற்றும் அவர்களின் பணிக்கால நீட்டிப்பை மதிப்பிடுவதற்காக, மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் தலைவரால் ஆய்வு செய்யப்படும்.

சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளரால் (SHO) வழங்கப்படும் வருகைச் சான்றிதழ் மற்றும் சட்டத் தன்னார்வலர்களால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில், மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தால் அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும்.

சட்டத் தன்னார்வலர் ஒருவருக்கு, ஒவ்வொரு வருகைக்கும் ரூ.1,000/- வீதம் மதிப்பூதியம் பெற உரிமை உண்டு: எனினும், ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5,000/- என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டே இத்தொகை வழங்கப்படும்.

தகுதியான நபர்கள் சட்ட தன்னார்வ தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை **https://virudhunagar.dcourts.gov.in/** என்ற விருதுநகர் மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, **பூர்த்தி செய்த விண்ணப்பம் மற்றும் உரிய ஆவணங்களுடன் 30-05-2026 தேதி மாலை 05.45 மணிக்குள் பதிவு தபால் மூலமாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**விண்ணப்பங்கள் நேரில் பெறப்படமாட்டாது. விருதுநகர் மாவட்டத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.** மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படாத விண்ணப்பங்கள் குறித்த தகவல்கள் மற்றும் நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விபரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் விவரமும் **https://virudhunagar.dcourts.gov.in/** என்ற விருதுநகர் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

ஒப்பம் /- A.கந்தகுமார் M.L.,
தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்.

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, விருதுநகர் மாவட்டம்(இ)திருவில்லிபுத்தூர் சட்ட தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

1. மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.
2. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும் நிரந்தர பணியென கருத இயலாது.
3. மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை விருதுநகர் நீதிமன்ற **https://virudhunagar.dcourts.gov.in/** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 30-05-2026 தேதி மாலை 05.45 மணிக்குள் **பதிவு தபால் மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் நேரில் பெறப்படமாட்டாது.**
4. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

**தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**மாவட்ட நீதிமன்ற வளாகம்,**
**விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர் - 626135.**

5. விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி 30-05-2026 மாலை 05.45 மணி அதற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்ககொள்ளப்படமாட்டாது.
6. கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பிறந்த தேதி மற்றும் வயதுக்கான சான்று | பிறப்பு சான்றிதழ் S.S.L.C / H.S.C சான்றிதழ் |
| 2 | ஜாதி சான்று | தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட ஜாதி சான்று |
| 3 | கல்வித் தகுதி | H.S.C / Degree / Diploma சான்றிதழ்கள் |
| 4 | இதர கல்வித் தகுதி | ஏதேனும் இருப்பின் |
| 5 | நிரந்தர முகவரிக்கான சான்று | குடும்ப அட்டை, வாக்காளர் அடையள அட்டை, ஆதார் அட்டை, பாஸ்போர்ட் |
| 6 | அனுபவ சான்றிதழ்கள் | ஏதேனும் இருப்பின் |
| 7 | நன்னடத்தை சான்றிதழ் | அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் அல்லது அரசிதழ் அதிகாரியிடம் (Gazetted Officer) பெறவேண்டும். |

7. மேலும் விவரங்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்டப்பணிகள் (அ) வட்ட சட்டப்பணிகள் குழுக்களை அணுகலாம் (அ) **https://virudhunagar.dcourts.gov.in/** என்ற விருதுநகர் நீதிமன்ற இணையதளத்தையும் பின்பற்றலாம்.

ஒப்பம் /- A.கந்தகுமார் M.L.,
தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
விருதுநகர் மாவட்டம் (இ)திருவில்லிபுத்தூர்.

**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, விருதுநகர் மாவட்டம் (இ)திருவில்லிபுத்தூர்.**
**சட்ட தன்னார்வ தொண்டார்களாக பணிபுரிவதற்கான விண்ணப்ப படிவம்**

**புகைப்படம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தந்தை / கணவர் பெயர் | : | |
| 3 | பாலினம் | : | ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர் |
| 4 | பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழை இணைக்கவும்) | : | |
| 5 | கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்) | : | |
| 6 | சாதி (சான்றிதழை இணைக்கவும்), இனம், மதம் மற்றும் தாய்மொழி | : | |
| 7 | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | |
| 8 | இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 9 | திருமண நிலை | : | |
| 10 | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 11 | தாங்கள் எந்தப் பகுதியில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (டிக் செய்யவும்) | : | விருதுநகர் / அருப்புக்கோட்டை /சாத்தூர் / சிவகாசி / திருவில்லிபுத்தூர் / இராஜபாளையம் / வத்ராப் / காரியாபட்டி / திருச்சுழி |

நாள்:

இடம்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்